திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, சென்னை மாநகராட்சி மூலம் தென் சென்னையிலே மைலாப்பூரில் திருவள்ளுவருக்குப் பெரிய சிலை அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சிலையைச் சுற்றி இருக்கின்ற இடத்தைப் பார்க்கின்ற பொழுது மிகவும் அருவருப்பாகக் காட்சி அளிக்கிறது. ஆகவே, திருவள்ளுவர் சிலையைச் சுற்றியுள்ள அந்த இடத்தில் நல்ல பூங்காவை அமைத்து அதை நல்ல இடமாக அமைக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்தக் கேள்வி கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை அமைப்பதைப் பற்றியதாகும். எனவே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனியாக இந்தக் கேள்வியைத் தருவார்களேயானால் அதற்குரிய துறையினிடத்திலேயிருந்து விரிவான பதில் அவர்களுக்குக் கிடைக்கும்.

வேலூர் நகரில் 1982 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட அரசுப் பொருட்காட்சி

*வினா எண். 288—திரு. இல. பலராமன் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு வேலூர் நகரில் 1982 ஆம் ஆண்டு சுற்றுலா வாரியம் மூலம் பொருட்காட்சி அமைக்கப்பட்டதற்கான செலவு எவ்வளவு ?

(ஆ) எந்த அடிப்படையில் அங்காடிகள் வாடகைக்கு விடப்பட்டன ?

(இ) அதன் மூலம் கிடைத்த வசூல் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) வட ஆற்காடு வேலூர் நகரில் முதன் முறையாக 1982 ஆம் ஆண்டு செய்தி துறையின் சார்பாக அரசுப் பொருட்காட்சி நடத்தியதற்கு ரூபாய் 6.22 லட்சம் செலவு செய்யப்பட்டது.

(ஆ) பொது ஏல முறையில் அங்காடிகள் வாடகைக்கு விடப்பட்டன.

(இ) அங்காடிகள் வாடகை மூலம் ரூ. 75,000 கிடைத்தது. இந்த பொருட்காட்சி நடத்தியதின் மூலம் கிடைத்த மொத்த வருவாய் ரூ. 10·72 இலட்சம்.

1983 பிப்ரவரி 15]

திரு. ந. குலசேகர பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆண்டும் வேலூரில் பொருட்காட்சி நடத்துவதற்கு அரசுக்குத் திட்டம் உள்ளதா ? அப்படியென்றால் எப்பொழுது அந்தப் பொருட்காட்சி துவங்கவிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவரவர்களே, மின்சார நெருக்கடி, மற்றும் பல இயற்கையினுடைய தாக்குதல் போன்ற சூழ்நிலைகளை மனத்திற்கொண்டு பொருட்காட்சியை இந்த ஆண்டு நடத்த வேண்டுமா அல்லது தள்ளி வைக்கலாமா என்பதைப் பற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வேலூரில் நடந்த அந்தப் பொருட்காட்சியின்போது மாண்புமிகு அமைச்சரவர்கள் எங்களுக்கு ஒரு வாக்குறுதி தந்தார்கள். வேலூருக்கு அருகில் உள்ள கோத்தமலையைச் சுற்றுலா ஸ்தலமாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கையைப் பல உறுப்பினர்கள் விடுத்தோம். அதை அமைச்சரவர்கள் ஏற்றுக் கொண்டு ஆவன செய்வதாகச் சொன்னார்கள். அது சம்பந்தமான ஆய்வு அரசில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவரவர்களே, சுற்றுலா ஸ்தலமாக ஆக்குவதற்கும், இந்தப் பொருட்காட்சியை நடத்துவதற்கும் தொடர்பில்லை. மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய கருத்துக்கள் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. சி. கோபால் : மாண்புமிகு தலைவரவர்களே, கடந்த ஆண்டு வேலூரில் பொருட்காட்சி நடந்தபொழுது ஏறத்தாழ 4 இலட்சம் ரூபாய் இலாபம் வந்ததாகப் அமைச்சரவர்கள் சொன்னார்கள். அரசுக்கு வருவாய் வருகின்ற இந்த நிலையிலே மின்சாரத்தைப் பொறுத்தவரையில் வேண்டுமானால் தனிப்பட்ட முறையிலே அரசிடத்திலேயிருந்து விதிவிலக்கு பெற்று, வேலூரிலே அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவரவர்களே, மின்சாரத்தைக் கூட மிகக் குறைந்த அளவிலே பயன்படுத்துவது அப்படித் தேவையானால் ஜெனரேட்டர் வைத்துப் பயன்படுத்துவது பற்றிக்கூட திட்டங்கள் பரிசீலிக்கப்படுகின்றன. இருந்தாலும் பொதுச் சூழ்நிலைகளை மனத்தில் எண்ணி அந்தப் பொருட்காட்சி நடத்தப்பட வேண்டுமா அல்லது கொஞ்சம் தள்ளி வைப்பதா அல்லது இந்த ஆண்டு நடத்தாமலே தவிர்க்கப்படலாமா என்பதைப் பற்றியெல்லாம் அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

[1983 பிப்ரவரி 15

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவ அவர்களே, இதுபோன்ற சுற்றுலாப் பொருட்காட்சிகள் எல்லா மாவட்டங்களிலும் நடத்தப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலை வரவர்களே, இது சுற்றுலாத் துறையின் மூலம் நடத்தப்படுவது அல்ல. சென்னையிலே மட்டும்தான் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இந்தப் பொருட்காட்சியை நடத்துகிறது. மற்ற மாவட்டத் தலை நகரங்களில் நம்முடைய செய்தித் துறை சார்பாக நேரடியாகவே அரசின் சார்பிலே நடத்திக் கொண்டிருக்கிறோம்.

[முற்பகல் 9-50]

இப்போது அநேகமாக 7, 8 மாவட்டத் தலைநகரங்களில் பொருட்காட்சியை நடத்திக் கொண்டிருக்கிறோம். மீண்டும் தொடர்ந்து மாவட்டத் தலைநகரங்களில் நடத்துவதற்கான திட்டமும் இருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர் களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே மின்சாரப் பற்றாக் குறை இருக்கிற காரணத்தாலே பொருட்காட்சி நடத்துவதைப் பற்றி யோசித்துக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், பத்திரிகைகளிலே நடத்தப்படும் என்று செய்திகள் வந்துள்ளன. ஏற்கனவே வட ஆற்காடு மாவட்டத்தில் மின்சாரம் இல்லாமல் விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந் நிலையில் இப்படிப்பட்ட பொருட்காட்சி நடத்துவது தேவை தானா என்று அரசாங்கம் யோசிக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே அரசின் சார்பிலே நாங்கள் யோசித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நடத்தப் படும் என்று ஏதோ பத்திரிக்கைச் செய்தி வந்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். அந்தப் பத்திரிகை இந்தப் பொருட் காட்சியை நடத்தவில்லை. அரசுதான் நடத்துகிறது. அதை நடத்துவதைப் பற்றி யோசித்துக்கொண்டிருக்கிறது. அதைத் தள்ளிப் போடலாமா என்பது பற்றியும் யோசித்துக் கொண்டு இருப்பதை பற்றியும் தெரிவித்து இருக்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, அரசுப் பொருட்காட்சி நடத்துகிற போது பல்வேறு துறைகளின் சார்பாக பல ஸ்டால்கள் வைக்கப்படுகின்றன. நான் கேட்க விரும்புவது தமிழ்நாட்டையே சட்டமன்றப் பேரவைதான் நிர்வகிக்கின்றது. அந்தச் சட்டமன்றப் பேரவைத் துறை சம்பந்தமான விவரங்கள் அங்கே வைக்கப்படுமா ?

1983 பிப்ரவரி 15]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு நல்ல யோசனை. வருகின்ற பொருட்காட்சிகளிலே இது குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 289, 290, 291, 292 ஆகியவை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.

விவசாயத் தொழிலாளர்களுக்கு ஒய்வூதியம் வழங்கும் திட்டம்

*வினா எண். 297—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) விவசாயத் தொழிலாளர்கள் பென்ஷன் வழங்கும் திட்டத்திற்கு 1980—81-ல் எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது?

(ஆ) இதனால் எத்தனை பேர்கள் பயனடைந்தனர்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) மற்றும் (ஆ) ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர்களும், முதியோர் ஒய்வூதியத் திட்டத்தின் மூலம் பயன் பெறும் பொருட்டு, முதியோர் ஒய்வூதியத் திட்டத்தினை விரிவுபடுத்தி, 15—3—1981 முதல் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. 1980—81ல் இத்திட்டம் கொண்டு வரப்படவில்லையாதலால், அவ்வாண்டில் இத்திட்டத்திற்கான செலவு மற்றும் பயனடைந்தவர்கள் பற்றி வினா எழ இடமில்லை.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவசாயத் தொழிலாளர்கள் 60 வயதைக் கடந்தவர்கள் போடக்கூடிய மனுக்களிலே, சில மனுக்கள்தான் சாங்ஷன் ஆகிறது. மீதியுள்ளவை சாங்ஷன் ஆகவில்லை. அரசாங்கம் 60 வயதைக் கடந்த அனைவருக்கும் பென்ஷன் கொடுக்கும் திட்டத்தை நிறைவேற்ற முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 60 வயது நிரம்பிய ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர்கள் இதுவரையில் 30 ஆயிரம் பேர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. தமிழகத்திலே உள்ள எல்லா ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கும் உதவித் தொகை வழங்குவது என்று சட்டமன்றத்திலேயே குறிப்பிட்டு இருக்கிறேன். அரசு அதற்காக பரிசீலித்து வருகிறது என்பதையும் குறிப்பிட்டு இருக்கிறேன்.